


சென்னை மயிலாப்பூரில் உள்ள கவிக்கோ மன்றத்தில், ஜூன் 3'ஆம் தேதியன்று மன்றம் அமைப்பின் சார்பில் "தமிழ்நாடு: முயற்சியும் முன்னேற்றமும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் நிகழ்ச்சியில் மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் (ஓய்வு), கவிஞரும் திரைப்பட பாடலாசிரியருமான யுகபாரதி மற்றும் மருத்துவரும், சமூக செயற்பாட்டாளருமான திருமிகு.ஷர்மிளா, திராவிட இயக்க எழுத்தாளரும் மூத்த பத்திரிகையாளருமான கோவி.லெனின் ஆகியோர் பங்கேற்று தமிழ்நாட்டின் வளர்ச்சியை பற்றி உரையாற்றினர். சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் மனித உரிமைகள் குறித்தும், தமிழ்நாட்டின் வளர்ச்சி, அதன் மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்ட இந்த கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA) – பஹ்ரைன் சார்பில், முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு ரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வு தலைவர் முஹமது ஹுசைன் மாலிம் தலைமையில், செயல் தலைவர் கருணாநிதி சண்முகம் மற்றும் துணை பொறுப்பாளர்கள் ஆலோசனையின் பேரில் சிறப்பாக நடைபெற்றது. துணை பொறுப்பாளர் மன்னை முபாரக் ஒருங்கிணைத்த இந்த முகாமில் 74 நபர்கள் ரத்ததானம் செய்தனர். நிகழ்வின் சிறப்பாக, அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. காணொளி வாயிலாக உரையாற்றி வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்வில் நிர்வாகிகள் இஸ்மாயில், கபீர் அஹமத், சதீஷ், திருமேனி,சபீக்,லலித், சங்கீதா பாபு, முபாரக்அலி, முகமது ஆரிஃப், மணிவண்ணன், ஆபித் அலி, பிரபாகரன், அசோக், டேவிட், செல்வகுமார், ஸ்ரீதர் சிவா, ஆசாத் மைதீன், சல்மான் மாலிம், சேகர், சாகுல், முகமது சலீம், சாராபுதீன், முஹைதீன், ஷாஹுல் ஹாஜா, அக்பர் அலி, அல்லா பிச்சை கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி

## மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

### தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

**மதுரை வடக்கு மாவட்டம்**

மதுரை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட **திரு.யு.யுவராஜா** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.அ.பா.ர.அண்ணாமலை அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மேலூர் தொகுதி களப்பணி) **திரு. சந்தோஷ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சோழவந்தான் தொகுதி களப்பணி) **திரு. பார்த்திபன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மதுரை கிழக்கு தொகுதி களப்பணி) **திரு. நாகேந்திரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை வடக்கு மாவட்ட மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மதுரை மேற்கு தொகுதிகளப்பணி) **திரு. ஹரிஷ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட **திருமதி. சுமதி** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.ராகவன் ராமு அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. குணசுந்தரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**மேலூர் சட்டமன்ற தொகுதி**

மேலூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.பாண்டி மோகன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மேலூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.உமர் ஆசிப்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மேலூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.புஷ்பலதா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திருமதி.ம.சகஸ்ரா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மேலூர் வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.ச. ஞானசம்பந்தன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.மு.தியாகராஜன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மேலூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு.ஆ.அருண்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.தி.அபினாஷ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி**

மதுரை மேற்கு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.தனபால்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை மேற்கு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.சுந்தரேஸ்வரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை மேற்கு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.அம்சத்து ராணி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி**

மதுரை கிழக்கு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.பிரவீன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை கிழக்கு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.மாரி செல்வம்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை கிழக்கு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. கவிதா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை கிழக்கு தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.சசிகலா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திருமதி.பா.லெட்சுமி** பாண்டீஸ்வரி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**சோழவந்தான் சட்டமன்ற தொகுதி**

சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.சதீஷ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.அரவிந்த்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.சத்யா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு.மகேந்திரன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.நிதிஷ்கண்ணன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு. நிதிஷ்கண்ணன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.காளி கமன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மதுரை மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. வணிபிரேமா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திருமதி.இந்துமதி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அலங்காநல்லூர் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. சுரேஷ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. அலெக்ஸ் பாண்டியன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அலங்காநல்லூர் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு. கவியரசன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. ரியாஸ்கான்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சோழவந்தான் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு. P.முத்துப்பாண்டி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சோழவந்தான் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. A.அய்யனார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சோழவந்தான் பேரூர் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. M.பிருந்தா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை
நாள்- 05.06.2025

2026 சட்டமன்றத் தேர்தலில்

# 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற அயராது பாடுபடுவோம்!

## திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடைபெற்ற அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 7-

நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற அயராது பாடுபடுவோம் என்று திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடைபெற்ற அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் 04.06.2025 மாலை 4.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி, தலைவர் துரை கி.சரவணன், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்து மாணிக்கம், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ. நாகலிங்கம், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் 4 அணிகளின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா**

கழகத் தலைவர் அவர்கள் கழகப் பொதுக்குழுவில் அறிவித்தப்படி முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது என்றும், பள்ளி மாணவ - மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவுகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், தமிழ்நாடு முழுவதும் அணிகளின் செயல்பாடுகளை விரைவுப்படுத்தவும், ஆலோசனை வழங்கிடவும், கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி. அவர்களை மேற்கூறிய அணிகளுக்கு ஆலோசகராக நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும், கழகப் பொதுச் செயலாளர், துணை முதல்வர் ஆகியோருக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அறிமுகம், அணியின் செயல்பாடுகள், அடுத்தக்கட்ட செயல்பாடுகள் குறித்து விவாதிக்க ப்பட்டது.

அணிகளின் மாநில நிர்வாகிகள் அணிகளின் வளர்ச்சிக்கு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். கழக துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் அக்கருத்துக்களை கழகத் தலைவரிடம் எடுத்துக் கூறி, தலைவரின் மேலான ஆலோசனைகளை பெற்று, அணிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதாக உறுதியளித்தார்.

கழக அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படாமல் உள்ள மாவட்டங்களில் மூன்று மாத இலக்கு நிர்ணயித்து, கழக முப்பெரும் விழாவிற்கு முன்பாக மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களை நியமிக்க வேண்டுமென இக்கூட்டம் அணிச் செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு என்ற தாரக மந்திரத்தை மனதில் வைத்து அணி நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று மக்களிடம் தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி, வருகிற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் நமது திராவிட மாடல் அரசு 234 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடிட அயராது பாடுபடுவோம் என்று உறுதியளிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# செஞ்சியில் 1000 மகளிர்களுக்கு நல உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, ஜூன் 7 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மை இஸ்லாமிய 1000மகளிர்களுக்கு ரூ.5 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள்விழாவை செம்மொழி நாளாக விழுப்புரம் வடக்கு மாவட்ட முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிறுபான்மை இஸ்லாமிய மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி பேரூராட்சி சத்திர தெருவில் உள்ள பெரிய மசூதி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத்மஜித் பாபு தலைமை தாங்கினார் .செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளரும்,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் ஆயிரம் இஸ்லாமிய மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார் .

அப்போது நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்.

கல்வி மூலம் சமுதாயத்தில் முன்னேற்றம் அடைவதற்கு பெண்கள் கல்வி பெறவேண்டும், பெண்ணுரிமை பாதுகாக்கப்பட வேண்டும், விதவைக்கு மறுவாழ்வு திட்டம் போன்ற என்ற உன்னத திட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார்.

அந்த வகையில் இன்று ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டில் இந்திய திணிக்க முயற்சிக்கிறது இதை முதன் முதலில் தடுத்து நிறுத்தியவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

இதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவிலும் இந்தியை தடுத்து நிறுத்தி உள்ளனர்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நிர்வாகிகள் ஜான் பாஷா, நூர்ஜகான் ஜாபர்,அஷ்ரப், முபாரக், சமியுல்லா, ஜே.எஸ். சர்தார், ஷாஜகான், தொண்டரணி பாஷா,ஷாஜி ஷரீப், ரோமியன், பிரபு,கோகுல், பிரபா, ஹாஜி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆம்பூரில் கலைஞர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் 102 சிறுபான்மையினர் பெண்களுக்கு மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், ஆம்பூர் நகர செயலாளர் எம்.ஆர்.ஆறுமுகம், ஷபீர்அகமத், மாதனூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் க.இராமமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாமுவேல் செல்லப் பாண்டியன், ஆம்பூர் நகர மன்ற தலைவர் ஏஜாஸ் அகமது, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் மற்றும் நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காரைக்கால் - திருப்பட்டினம் கழக முன்னோடி

# போலீஸ் மணிவண்ணன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

காரைக்கால், ஜூன் 7 -

காரைக்கால்திருப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த திராவிட முன்னேற்ற கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும், மாநிலக் கழகத்தின் மூத்த முன்னோடியும், காரைக்கால் மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவை தலைவரும்,புதுச்சேரி மாநில காவல் துறையில் பணி புரிந்து ஓய்வு பெற்ற போலீஸ் மணிவண்ணன் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.




தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திராவிட மணி

**ஜூன் 7 (2001)**



**கருநாடக மாநிலத்தில் கழகத்தை வளர்த்த தளகர்த்தர். கருநாடக மாநில அமைப்பாளராகவும், கழக சட்டமன்ற உறுப்பினராகவும், பெங்களூர் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**1960ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையாளராக நின்று நடத்திய கழகத் தேர்தலில் கருநாடக மாநில அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு பெற்றவர். தொடர்ந்து கழக வளர்ச்சிக்காக திறம்பட பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும்விழாவில் இவருக்கு 'கலைஞர் விருது' வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**